# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

## .....நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவைகளுக்காகக் கவலைப்படும்....

மத்தேயு 6:34

செய்தி மலர்
2019
ஜூலை

மலர் : 16
இதழ் : 3



# சபை ஊழியரின் அன்பு மடல்



கிறிஸ்துவுக்குள் அன்பான திருச்சபை குடும்பத்தாரே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் எல்லோரும் நலமாக இருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறேன். என்னுடைய ஆவலும், அனுதின ஜெபமும் அதுவே.

கடந்த ஜுன் மாதம் முழுவதும் நம்மை கண்மனி போல பாதுகாத்த தேவன் இந்த ஜுலை மாதத்திலும் சகல ஆசீர்வாதத்திற்குள்ளும் நம் சபையை வழி நடத்துவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறினார் "நாளைக்காக கவலைப்படாதிருங்கள். நாளைய தினம் தன்னுடையவைகளுக்காக கவலைப்படும்" என்று (மத்–6:34)

பிரியமானவர்களே வருங்காலத்திற்காக நாம் கவலைப்படக்கூடாது என்று சொல்லி ஆண்டவர் விரும்புகிறார். கவலை ஒவ்வொருவரையும் வாட்டி வதைக்கிறது. பிள்ளைகளைக் குறித்த கவலை, பெற்றோரை குறித்த கவலை, வருமானத்தைக் குறித்த கவலை, உடல் சுகத்தைக் குறித்த கவலை, கடன் பாரத்தைக் குறித்த கவலை, பாவத்தைக் குறித்த கவலை, வேலையைக் குறித்த கவலை, இறந்த பிறகு உள்ள நித்திய வாழ்க்கையை குறித்த கவலை என எத்தனையோ கவலைகள் மனிதர்களை வாட்டி வதைக்கிறது. ஆனால் இயேசு கூறுகிறார் எதைக் குறித்தும் கவலைப்படாதிருங்கள் என்று. ஆகாயத்துப் பறவைகள் எதைக் குறித்தும் கவலைப்படுவதில்லை காரணம் பரம பிதா அவைகளுக்கு பிழைப்பூட்டுகிறார். அவைகளைப் பார்க்கிலும் மனிதர்கள் விசேஷித்தவர்கள் அல்லவா? (மத்–7:26)

ஆகவே கர்த்தர் மேல் பாரத்தை வைத்துவிட்டு கவலைகள் நீங்கி சந்தோஷமாய் வாழ வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். வேதம் கூறுகிறது "தம்முடைய சொந்தக் குமாரனென்றும் பாராமல் நம் எல்லாருக்காகவும் அவரை ஒப்புக்கொடுத்தவர் அவரோடே கூட மற்ற எல்லாவற்றையும் நமக்கு அருளாதிருப்பது எப்படி"? (ரோம–8:32)

### சீஷர்களைப் போல.......

ஒரு முறை இயேசுவும் சீஷர்களும் அக்கரைக்கு போக படகில் பயணித்துக்கொண்டிருந்த போது பலத்த சுழல் காற்று உண்டாகி படவு நிரம்பத் தக்கதாக அலைகள் அதின் மேல் மோதிற்று ஆனால் இயேசுவோ பின்னணியத்தில் தலையணையை வைத்து அமைதியாய் நித்திரை செய்து கொண்டிருந்தார். ஆனால் சீடர்களோ தங்களுக்கு உயிருக்கு பயந்து என்ன நடக்குமோ? என்று அஞ்சி இயேசுவை தட்டி எழுப்பி போதகரே நாங்கள் மடிந்து போகிறது உமக்கு கவலையில்லையா? என்று புலம்பினார்கள். ஆனால் இயேசுவோ எந்த பதைபதைப்பும் இல்லாமல் எழுந்து காற்றை அதட்டி கடலைப் பார்த்து இரையாதே அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்று போய் மிகுந்த அமைதல் உண்டாயிற்று. இயேசு அவர்களை நோக்கி "ஏன் இப்படி பயப்பட்டீர்கள் ஏன் உங்களுக்கு விசுவாசம் இல்லாமல் போயிற்று என்று சீடர்களை கடிந்து கொண்டார். (மாற்கு–4:35–41)

என் அன்பு சகோதர, சகோதரிகளே வாழ்க்கையில் திடீரென பல பிரச்சனைகள், போராட்டங்கள் புயல் காற்றை போல சீறி வீசுகிறதோ? ஐயோ நான் என்ன செய்வேன்? நான் மடிந்து விடுவேனோ? எனக் கலங்குகிறீர்களோ? அமைதியாய் உங்கள் பக்கம் நிற்கும் இயேசுவை நோக்கி பாருங்கள். அவரிடம் பேசுங்கள், அவரை விசுவாசியுங்கள். இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன் ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு கதவை திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து அவனோடே போஜனம் பண்ணுவேன் அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். (வெளி–3:20) என்று ஆவலாய் காத்திருக்கும் இயேசுவிடம் சொல்லுங்கள். காற்றையும், கடலையும் அதட்டி அமைதிப்படுத்தியவர் உங்கள் வாழ்க்கையில் எப்பேர்பட்ட போராட்டமாய் இருந்தாலும் ஒரு நொடியில் அமைதிப்படுத்துவார். அல்லேலூயா! நிலையான விசுவாசத்தை கர்த்தர் உங்களிடத்தில் எதிர்பார்க்கிறார்.

மூன்று நாட்களாக கர்த்தருடைய வார்த்தையை கேட்டு வனாந்திரத்திலே தங்கியிருந்த ஜனங்களுக்காக பரிதபித்த இயேசு தம் சீஷர்களை நோக்கி மக்களுக்கு உணவளிக்க சொன்ன போது "இந்த வனாந்திரத்திலே ஒருவன் எங்கேயிருந்து அப்பங்களை கொண்டு வந்து இத்தனை பேர்களை திருப்தியாக்ககூடும்?" என்றார்கள். ஆனால் இயேசுவோ ஐந்து அப்பம் இரண்டு மீன்களை கொண்டு ஐயாயிரம் புருஷர்களை போஷித்து பன்னிரண்டு கூடைகள் மீதமெடுக்க செய்தார். நடக்குமா? என நினைக்கிற காரியங்கள் இயேசுவின் நாமத்தில் நிறைவேறும். மனித ஞானம் திட்டமிடுகிற கணக்குகள் தேவ ஞானத்திற்கு முன்பாக ஒன்றுமில்லாமல் போய் விடும்.

தேவ ஞானம் நமக்கு அளவில்லாத ஆசீர்வாதங்களையும், கிருபைகளையும் கொண்டு வந்து நம்மை திருப்திபடுத்தும் என்பதில் கொஞ்சமேனும் சந்தேகமில்லை.

## 1. மரியாளைப் போல.......

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மரியாளிடத்தில் பிறப்பார் என்று தேவதூதன் அறிவித்த போது மரியாள் மிகவும் கலங்கி போய்விட்டாள். தேவதூதனை நோக்கி இது எப்படி ஆகும் என்று வினவினாள். அதற்கு தேவ தூதன் சொன்ன பதில் தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்று (லூக்–1:28–38)

இன்று வாக்குதத்தமாக ஆண்டவர் வேதத்தின் மூலம் அநேக காரியங்களை உங்களோடு பேசுகிறார். இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் எப்படி நிறைவேறும்? வாழ்க்கையிலே இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசயங்கள் நடக்குமா? வீட்டின் சூழ்நிலைகள் மாறுமா? இந்த வாக்குத்தத்தங்கள் எல்லாம் உண்மைதானா? என்றெல்லாம் மரியாளைப் போல உங்கள் உள்ளங்கள் எல்லாம் கலங்கிக் கொண்டிருக்கிறதோ? மரியாளுக்கு சொன்ன அதே வார்த்தையை ஆண்டவர் உங்களுக்கும் கொடுக்கிறார். "தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை" என்று. வேதம் கூறுகிறது, "அவர் சொல்ல ஆகும் கட்டளையிட நிற்கும்" என்று. (சங்கீ–33:9)

பிரியமானவர்களே, உங்கள் வாழ்க்கையில் மாற்றங்கள் வராதா என நீங்கள் கலங்கிக் கொண்டிருக்கலாம். அது முடியாதது போல தோன்றலாம் ஆனால் ஒரு நொடிப்பொழுதில் கர்த்தர் அதை மாற்றிப் போடுவார். காரணம் அவர் நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியை செய்கிற வல்லமையின் தேவன் அவர். (எபே-3:20)

அவர் வனாந்திரத்திலே வழியை உண்டு பண்ணுகிறவர் அவாந்திர வெளியிலே ஆறுகளை உண்டு பண்ணுகிறவர். (ஏசா-43:19)அவர் சமுத்திரத்திலே வழியையும், வலிய தண்ணீர்களிலே பாதையை உண்டாக்கி புதிய காரியங்களை செய்கிறார். காரணம் என்ன தெரியுமா? அவருடைய பிள்ளைகளாகிய நாம் கர்த்தர் செய்த அதிசயத்தை துதி செலுத்தி அறிவிப்பதற்காக. அல்லேலூயா!

இந்த ஜனத்தை எனக்கென்று ஏற்படுத்தினேன் இவர்கள் என் துதியை சொல்லி வருவார்கள். (ஏசா-43:16-21) அதனால்தான் மரியாள் சொன்னாள் "இதோ நான் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது" என்று. கிருபை பெற்ற மரியாள் தேவாதி தேவனை பெற்றெடுத்த தாயாக பேறு பெற்றாள்.

முடியாது என்று நீங்கள் எண்ணுகிற காரியங்கள் இயேசுவின் நாமத்தில் நிறைவேறும் என்று உறுதியாக விசுவாசியுங்கள் அப்பொழுது கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் அதிசயங்களை செய்வார்.

## 2. மார்த்தாளை போல..

ஒரு முறை இயேசு மார்த்தாள் மற்றும் மரியாள் என்ற சகோதரிகள் வீட்டுக்கு வந்திருந்தார். மரியாள் இயேசுவின் பாதத்தருகே உட்கார்ந்து அவருடைய வசனத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனால் மார்த்தாளோ பற்பல வேலைகளை செய்வதில் மிகவும் வருத்தமடைந்து அவரிடத்தில் வந்து ஆண்டவரே நான் தனியே வேலை செய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதை குறித்து உமக்கு கவலையில்லையா? எனக்கு உதவி செய்யும்படி அவளுக்கு சொல்லும் என்றாள். அதற்கு இயேசு மார்த்தாளே, மார்த்தாளே நீ அநேக காரியங்களைக் குறித்து கவலைப் பட்டு கலங்குகிறாய். தேவையானது ஒன்றே மரியாள் தன்னை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டாள் என்றார். (லூக்-10:38-42)

என் அன்பு சகோதர சகோதரிகளே, நீங்களும் வீட்டில் நடைபெறும் போராட்டங்களினால் மனம் பதறி சஞ்சலப்படுகிறீர்களோ? சூழ்நிலைகள் எல்லாம் உங்களுக்கு எதிராக காணப்படுகிறதோ? மனம் பல்வேறு பாரங்களினால் பதற்றமடைகிறதோ? எல்லாராலும் கைவிடப்பட்டு தனி மரமாக நிற்கிறீர்களோ? ţனிமை உணர்வு உங்களை வாட்டுகிறதோ? கவலைப்படாதிருங்கள். வேத வசனங்களை கேட்கும்படி ஆலயத்திற்கு ஓடி வாருங்கள். இயேசுவின் பாதங்களை கெட்டியாய் பற்றிக்கொள்ளுங்கள். "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல் எல்லாவற்றைங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடேகூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது

எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும், உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக காத்துக்கொள்ளும்" (பிலி-4:6,7) இதைத்தான் மரியாள் செய்தாள்.

மார்த்தாளை போல உலகக் காரியங்களைக் குறித்து அவள் கலங்கவில்லை. அவளுடைய நோக்கமெல்லாம் இயேசுவின் வார்த்தைகளை கேட்பது மாத்திரமே. அவளைப் போல நாமும் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக்கொள்ளும்படி வரப்போகும் தேவ இராஜ்ஜியத்தைக்குறித்து நோக்கமுள்ளவர்களாய் இருக்கும்போது (2-தீமோ-2:10) நம்மை பார்த்தும் இயேசு சொல்வார் தேவையானது ஒன்றே நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கை தெரிந்து கொண்டோம் என்று.

இயேசு சொன்னார் பூமியிலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டாம் இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும். இங்கே திருடரும் கன்னமிட்டு திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள். அங்கு பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை. அங்கே திருடர் கன்னமிட்டு திருடுகிறதுமில்லை (மத்-6:19,20) என்று. ஆகவே இந்த உலகத்திலே ஆண்டவருடைய வார்த்தையை கேட்டு விசுவாசித்து நற்கிரியைகளை செய்து ஆண்டவர் நாமத்திற்காக பாடுகளை அனுபவிக்கும்போது பரலோகத்திலே பொக்கிஷங்கள் சேர்த்து வைக்கப்படுகிறது. இவைகள்தான் நம்மை விட்டு எடுபடாத நல்ல பங்கு. அவரோடேகூட பாடுகளை சகித்தோமானால் அவரோடேகூட ஆளுகையும் செய்வோம். (2-தீமோ-2:12)

ஆகவே நாளைய தினத்தைக் குறித்து ஒருவரும் கவலைப்பட வேண்டாம். நம்மை குறித்து நாம் கவலைப் படுவதை விட தாயின் கர்ப்பத்தில் நம்மை உருவாக்கின தேவன் நம்மைக் குறித்து அதிக கரிசனை உள்ளவராயிருக்கிறார். எந்த நோக்கத்திற்காக கடவுள் நம்மை படைத்தாரோ அந்த நோக்கத்தை நிச்சயம் நிறைவேற்றுவார். நாம் செய்ய வேண்டியதெல்லாம் ஒன்றே ஒன்றுதான் அவர் மேல் முழு விசுவாசத்தை வைத்து கொஞ்சம் கூட கவலைப் படாமல் சந்தோஷமாய் நமக்கு நியமித்திருக்கிற பாதையில் பொறுமையாய் ஓடக்கடவோம்.

கர்த்தர் தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து ஜூலை மாதம் முழுவதும் சகல கவலைகளையும் போக்கி ஆசீர்வாத மழையை பொழியச் செய்து, அற்புதங்களையும் அடையாளங்களையும் நடத்தி, வசனங்களை உறுதி படுத்தி, விசுவாசத்தை வளர்த்து, வெற்றிகள் தந்து ஒவ்வொரு நாளும் கூட இருந்து கரம் பிடித்து வழி நடத்துவாராக!

கர்த்தரின் பணியில்,
சபையின் ஊழியர்

**சகோ. ஸ்டாலின்**

## இவைகளில் தேவன் பிரியப்படுகிறாரோ?

ஒரு சகோதரி தன் கணவனை பார்த்து ஒரு விருந்தாளி நம் வீட்டிற்கு வந்தால் அன்பொழுக பேசுகிறீர்களே? அப்படி என்னுடன் பேசக்கூடாதா? கரடு முரடாக பேசி என் மனதை காயப்படுத்துகிறீர்களே என்று கூறினார்கள். ஆம் சகோதரர்களே வீட்டில் மனைவியை காயப்படுத்தி விட்டு சபையில் மேடையில் நின்று, கர்த்தர் நம் காயங்களை கட்டுகிறார் ஆற்றுகிறார் தேற்றுகிறார் என்று நீங்கள் மேடையில் பிரசங்கம் பண்ணுவதில் தேவன் பிரியப்படுகிறாரோ?

சகோதரனிடத்தில் அன்பு கூராதவன் மேல் தேவன் பிரியமாய் இருக்கிறாரோ?

நீங்கள் ஜெபம் பண்ணும் போது பல சமயங்களில் இயேசு உம்மில் அன்பு கூறுகிறேன் ஆண்டவரே உம்மை நான் நேசிக்கிறேன் என்று கூறி ஜெபிக்கிறீர்கள் ஆனால் நீங்கள் காண்கின்ற சகோதரி யார்? உங்கள் மனைவி சகோதரிகளே நீங்கள் காண்கின்ற சகோதரர் யார்? உங்கள் கணவர். காண்கின்ற உங்கள் சகோதரன் மீது நீங்கள் அன்பு கூறுகிறேன் என்று சொல்லி பகைத்தால் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூறுவீர்கள்? அப்படியானால் நீங்கள் ஜெபம் பண்ணியும் பொய்யர் ஆகிறீர்கள் அப்படியானால் நீங்கள் செய்யும் ஜெபம் வானத்திற்கு எட்டுமோ? உங்கள் ஜெபத்தில் தேவன் பிரியமானவராய் இருப்பாரோ?

ஐவெநடடபைநவெ சநஉழபவைைழை. புரிந்து கொள்ளுங்கள் அறிவார்ந்த அங்கீகாரம் பண்ணுங்கள்

1 பேதுரு 3:7 ....புருஷர்களே ..ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனேகூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச்சுதந்தரித்துக்கொள்ளுகிறவர்களானபடியினால், அவர்களுக்குச் செய்யவேண்டிய கனத்தைச் செய்யுங்கள். இங்கு விவேகம் என்ற வார்த்தைக்கு புரிந்து கொள்ளுதல் (குரடட ரனெநச ளவயனெைபை) அங்கீகாரம் பண்ணுதல் (ஐவெநடடபைநவெ சநஉழபவைைழை)என்ற அர்த்தம் உள்ளது, அதாவது உங்கள் மனைவியை பரிபூரணமாக புரிந்து கொண்டு மனைவி என்ற மேன்மையான அந்தஸ்துடன் அங்கீகரித்து அவர்களுக்கு உரிய கனத்தை செலுத்துங்கள். கர்த்தர் உங்களோடு இணைந்திருக்கிறார் என்றும் உங்களுடைய வாழ்வின் உடன் பங்காளி என்று உங்களுடன் நித்திய ஜீவனை சுதந்தரிப்பவர்கள் என்று நினைத்து அவர்களை கனப்படுத்துங்கள், இப்படி நீங்கள் செய்யாவிடில், நீங்கள் வியர்க்க வியர்க்க ஜெபம் பண்ணினாலும் ஜெபத்தில் சாத்தானை ஓட ஓட விரட்டினாலும் நிச்சயம் உங்கள் ஜெபத்திற்கு தடை உண்டு. இயேசுவில் அன்பான தேவ ஊழியர்களே வேதம் நமக்கு என்ன சொல்லுகிறதோ அதை பின்பற்றுவோம்

(மீண்டும் சந்திப்போம்)

# தேவ செய்தி

கர்த்தருக்குள் பிரியமானவர்களே!

எல்லாம் வல்ல இயேசு பெருமானின் தம் திருவருளால் நம் அனைவரையும் கடந்த ஆறுமாதகாலம் நம்மை வழுவாமல் வழி நடத்தியதற்காக தேவாதி தேவனுக்கே ஸ்தோத்திரத்தையும் மகிமை செலுத்துவோம். இந்த பகுதியின் மூலம் உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.

அழியயுமாம் இவ்வுலகில் என்றும்
அழியா வரம் கொண்ட இயேசு
என்று பார் போற்றும் நம் வேந்தனின் மகிமைதனை
ஏற்புடன் பகிர்வதில் பெருமகிழ்ச்சி
உள்ளத்தில் பல நினைவுகள்
உலகத்தில் பல நினைவுகள் ஐயம் பல தீர்க்கும்
நம் பரிசுத்த வேதத்தில் பெண்மை குறித்து இதோ சில வார்த்தைகள் உங்களுடன்! அம்மா என்றால் அகிலமும் அறியும் எல்லாம் "அவள்தான்" என்பார் சிலர் வேதத்தில் அநேக இடங்களில் தாயின் அன்பு குறித்து சொல்லப்பட்டு இருக்கிறது, ஆனால் அதை நாம் சாத்தியபடுத்துகிறோமா? நம் குடும்பத்தில் அல்லது தனிப்பட்ட வாழ்க்கையில் நாம் எவ்வாறு இருக்கிறோம். இதோ சுய பரிசோதனை நடத்த தயாரா?

ஆங்கிலத்தில் அம்மா என்பதற்கு Mother என்று சொல்வார்கள். அதன் முழு விளக்கம்

M. Motivation – ஊக்கபடுத்துவது

O. Observation- கண்ணோக்கமாயிருப்பது

T. Tender Loving Care- அளவில்லாத அன்பு

H. Honest – உண்மை – நேர்மை

E. Efficient – ஏற்புடையதாய் இருப்பது.( எல்லா துறைகளிலும்)

R. Responsible – அக்கரையுடன் இருப்பது.தான் படைத்த மனிதனை உடன் இருந்து நோக்க தன் ஒருவனை கொண்டு இயலாது என்பதற்காகவே தாய் என்ற ஒரு உறவை தரணியில் தந்தார் இறைவன்.தாயானவள் வீட்டிலும், வேலை ஸ்தலங்களிலும், செய்கின்ற தொழிலிலும் அக்கரை காட்ட வேண்டும். தேவை அறிந்து சமயோகித புத்தியுடன் செயல்படவேண்டும். குடும்ப நபர்களின் குடும்ப வேலைகளை பகிர்ந்து கொள்ள வேண்டும். குறிப்பாக நம் பிள்ளைகளுக்கு அவர்களை கொண்டு செய்ய கூடிய சிறு சிறு வேலைகளை கற்று கொடுக்க வேண்டும். முக்கியமாக பெரிவர்களை மதிப்பதற்கு பிள்ளைகளின் எதிர்காலம் பெற்றோர்களாகிய நம்மிடம்தான் தேவன் தந்திருக்கிறார் என்ற உணர்வு நமக்கு வேண்டும், நாம் பெலவீன பாண்டமாய் இருந்தாலும் நம்மை புடமிடபட்ட பொன்னாக விளங்க தேவன் தாமே அருள்புரிவார் தாயை பற்றி வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம். நம் தேவன் தாயை போல தேற்றுகிறவராக இருக்கிறார். ஏசா–66:13ல் ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; என்று வாக்குதத்தம் கொடுக்கிறார்

முதலாவதாக . Motivation – ஊக்கபடுத்துவது

ஆண்டவர் எப்படி ஊக்கபடுத்துபவராக இருக்கிறார் என்று பார்த்தோமானால் வேதம் சொல்லுகிறது.ஆண்டவர் மோசையை ஊக்கபடுத்துகிறார், தேவனை பார்த்து நான் திக்குவாய் என்று சொல்லும் போது நீ போ உன் வாயோடு நான் இருப்பேன் என்று ஊக்கபடுத்துகிறார் யாத்–4:10,11,12 ஆகிய வசனங்களில். அப்பொழுது மோசே கர்த்தனை நோக்கி: ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர் உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றான்.11. அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும்

பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா?12. ஆதலால், நீ போ; நான் உன் வாயோடே இருந்து, நீ பேசவேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார்.நான் வாக்குவல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்தநாவும் உள்ளவன் என்றவுடன் அவனை தள்ளிவிட வில்லை தாயை போல ஊக்கபடுத்துகிறார் நான் இருக்கிறேன் என்று நம்மையும் தேவன் ஆண்டவரே நானா இதை செய்வது ?என்று தயங்க நிற்கும் போது கிதியோனை தேற்றியது போல உனக்கு இருக்கும் இந்த பெலத்தோடு போ என்று நம்மை வழிஅனுப்புகிற தேவன் நம் தேவன் .

இரண்டாவதாக Observation- கண்ணோக்கமாயிருப்பது

எப்படி நம் மேல் கண்ணோக்கமாய் இருக்கிறார் என்று பாத்ததோமானால் சங்-119:82 எப்பொழுது என்னைத் தேற்றுவீர் என்று, உம்முடைய வாக்கின்மேல் நோக்கமாய் என் கண்கள் பூத்துப்போகிறது. தாவீது ராஜா சொல்லுகிறார் அவர் நம்மை அவரது வாக்குதத்தத்தின் மூலமாக தேற்றுவதில் கண்ணோக்கமாய் இருக்கிறார் ஆதி-15:1 இந்தக் காரியங்கள் நடந்தபின்பு, கர்த்தருடைய வார்த்தை ஆபிராமுக்குத் தரிசனத்திலே உண்டாகி, அவர்: ஆபிராமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன் என்றார். அதே போல நம்மை பயப்படாதே நான் உன்னை தேற்றுவேன் என்று சொல்லி நம்மீது கண்ணோக்கமாய் இருக்கிறார். யோசு-1:5 நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை; நான் மோசேயோடே இருந்ததுபோல, உன்னோடும் இருப்பேன்; நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கைவிடுவதுமில்லை. என்று மேசேயின் மேல் கண்ணோக்கமாய் இருந்த தேவன் இன்றும் அனுதினமும் நம்மேல் கண்ணோக்கமாய் இருக்கிறார்.

மூன்றாவதாக .Tender Loving Care- அளவில்லாத அன்பு

உபா-10:18 அவர் திக்கற்ற பிள்ளைக்கும் விதவைக்கும் நியாயஞ்செய்கிறவரும், அந்நியன்மேல் அன்புவைத்து அவனுக்கு அன்னவஸ்திரம் கொடுக்கிறவருமாய் இருக்கிறார். இந்த உலகில் பணம் உள்ளவர்களிடத்தில் பாசம் செலுத்துபவர்களை நாம் பார்த்து இருக்கிறோம் ஏனெனில் அவர்களிடம் இருந்து நமக்கு உதவி வரும் என்ற ஒரு எதிர்பாப்பு ஆனால் நமக்கு உதவி செய்ய அவர்களுக்கு எந்த நிர்கெதியும் இல்லாதவர்கள் என்று இருக்கும் பொழுது அவர்களுக்கு நாம் உதவுவது என்பதுதான் தான தர்மம் ஆண்டவர் அழகாக அதை வெளிபடுத்துகிறார். திக்கற்ற பிள்ளைகள், விதவைகள் இவர்களுக்கு நியாயம் செய்வது என்பது ருல-உழனெைவைழையெட டழளந நிபந்தனையற்ற அன்பு இன்னும் அதிகப்படியாக சொல்ல போனால் ஆண்டவர் தம்மையே நமக்காக அந்த கோர சிலுவையில் ஒப்பு கொடுத்ததை சொல்ல முடியும் அதுதான் அளவற்ற அன்பு. தன் தாயை விட்டு பிரியபோகிறோம் என்று தெரிந்து தன் தாய்க்கு துணையாக ஒரு சீஷனை ஆயத்தபடுத்துகூடிய பராமரிக்கிற அன்பு நம்முடைய ஆண்வருடைய அன்பு

நான்காவதாக Honest – உண்மை – நேர்மை

நம்முடைய தேவன் சகல உலகத்தையும் படைத்தவர் சகலத்தையும் ஆள அதிகாரம் படைத்தவர் ஆனாலும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் தங்களைக்குறித்து இந்த உவமையைச் சொன்னாரென்று அறிந்து சில வேவுகாரர்களை அனுப்பி ஆண்டவரை சோதிக்க வருகிறார்கள் ஒரு வெள்ளி காசை காண்பித்து இதில் ஒரு சொரூபம் பொரிக்கபட்டிருக்கிறதே அது யாருக்கு சொந்தம் என்று கேட்க ராயனுடையதை ராயனுக்கும் தேவனுடையதை தேவனுக்கும் கொடுக்க வேண்டும் என்று நேர்மையான பதிலை தேவன் பதிவு செய்கிறார் சட்டத்திற்கு கட்டுபடும் நேர்மை உண்மை இதை குறித்து நாம் மத்-22:21 இராயனுடையது என்றார்கள். அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். மாற்-12:17 அதற்கு இயேசு: இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் எனறார். அவர்கள் அவரைக் குறித்து

ஆச்சரியப்பட்டார்கள். லூக்-20:25 அதற்கு அவர்: அப்படியானால், இராயனுடையதை இராயனுக்கும், தேவனுடையதைத் தேவனுக்கும் செலுத்துங்கள் என்றார். இதை 3 சுவிஷேச புத்தகத்திலும் வாசிக்கலாம். ஆண்டவரின் நேர்மை நான் சகலத்தையும் ஆள அதிகாரம் படைத்தவர் என்று எந்த ஒரு ஆராவாரமோ ஆர்பாட்டமோ இல்லாமல் குறை குடம் போல் ஆட்டம் போடாமல் நிறை குடமாய் நிலைத்து நின்றார் அப்படிபட்ட நேர்மையுள்ள ஆண்டவர் நம் தேவன்

ஐந்தாவதாக Efficent – ஏற்புடையதாய் –

ஏற்புடையதாக இருப்பது ! ஆண்டவர் எப்படி ஏற்புடையவராக இருந்தார் என்று ஒரு எடுத்துகாட்டு அநேகம் இருந்தாலும் குறிப்பாக கானா ஊர் திருமணத்தில் திராட்டசை ரசம் குறைவுபட்ட போது நான் தேவன் எனக்கும் இதற்கும் சம்மந்தமில்லை நான் ஆசீர்வதிக்க வந்தேன் ஆசிர்வதித்து பின் செல்வேன் என்று சொல்லி கட்டிகழிக்க வில்லை ,ஏற்புடையதான தேவையை தேவன் சந்தித்தார்.ஏற்புடையதாய் இருப்பது ஏற்ற வேளையில் தேவையான உதவியாளராக இருப்பது – திறமைசாலி என்றுகூட சொல்லலாம் தேவகைளை சந்திக்கிறவர், முன்பிருந்த ரசத்தைவிட அதிக சுவை உள்ளதாக உண்டாக்குவது, தேவன் அந்த அற்புதமான ஏற்புடைய செயலை செய்கிறார், யோவான் 2 ஆம் அதிகாரத்தில் இதை குறித்து நாம் வாசிக்கிறோம்

ஆறாவதாக Responsable – அக்கரையுடன் இருப்பது.

ஆண்டவர் எதன் மீது அக்கறை உடையவராக இருந்தார்

ஆண்டவர் சிலுவையில் அறைபடுவதற்கு முன்பு எருசலேம் நகரத்திற்கு வருகிறார் தேவ ஆலயம் முன் வைக்கபட்டிருந்த கடைகள் வியாபரா கூடங்கள் அனைத்தையும் அகற்றி தேவஆலயத்தை கள்ளர் குகையாக மாற்றபட்ட செய்கையை கண்டித்து அதில் நடக்ககூடிய அநியாயங்களை கண்டித்து தேவ ஆலயத்தின் மீதுள்ள அக்கரையில் அந்த செயலை செய்தார் இதை நாம் வாசிக்கலாம் லூக்கா 19 : 45. பின்பு அவர் தேவாலயத்தில் பிரவேசித்து, அதிலே விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் புறம்பே துரத்தத் தொடங்கி:46. என்னுடைய வீடு ஜெபவீடாயிருக்கிறதென்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர்குகையாக்கினீர்கள் என்றார்.ஜெப ஆலயத்தின் மேல் இருந்த அக்கரை

பிரியமான சகோதரிகளே நம்முடைய தேவன் நமக்கு எடுத்துகாட்டாக நாம் தியானித்த இந்த6 காரியங்களிலும் தாய்மார்களுக்கு எடுத்துறைக்கும் வண்ணம் செயல்பட்டதை வேதத்தில் மூலம் தியானித்தோம் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் இயற்கையிலேயே இப்படிபட்ட குணாஅதியங்களை கொடுத்தது ஆசசர்யம் அல்லவா தேவன் அனைவரோடும் ஆவியானவரின் ரூபத்தில் இருந்தாலும் நமக்கு எந்த நேரத்திலும் எந்த வகையிலும் உதவி செய்ய வல்லவராக இருந்தாலும் Motivation – ஊக்கபடுத்துவது. Observation- கண்ணோக்கமாயிருப்பது. Tender Loving Care- அளவில்லாத அன்பு (காட்டுவது)Honest – உண்மை – நேர்மையிலும் நம்மை பெரியவனாக பெரியவளாக மாற்றவும் ,Efficent – ஏற்புடையவர்களாக நம்மை உயர்த்தவும் ( எல்லா துறைகளிலும்)சு. Responsable – அக்கரையுடன் நடந்து கொள்ள பயிற்ச்சிவிக்கவும் மனுஷீக ரூபத்தில் தேவன் நம் ஒவ்வொருவருக்கும் தாயை கண்கண்ட தெய்வமாய் கொடுத்து இருக்கிறார் தாய்மையை போற்றுவோம் தாய்மையயை கொண்டாடுவோம் தேவன் நம்மோடு இருந்து தாய் போல தேற்றி நம்மை வழி நடத்துவாராக ஆமென்

கிறிஸ்துவக்குள் அன்பு சகோதரி

நகோமி ஜான்ஸன்

**" உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன்.**

**(ஏசாயா – 44:3)**

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

செல்வி.ரெஜினா ராமாமூர்த்தி
செல்வி.கீதா மகேஷ்ராஜ்
செல்வி.அஃபியா ஆரோக்கியதாஸ்
செல்வி.ஜீயோனா ஷேரன் செல்வசிங்
செல்வி. வென்பா ஜாயிஸ் பிரியா ரவி ஜான்பீட்டர்
செல்வி.ஜோஸ்பின் அந்தோணிசாமி
செல்வி.ஜெர்ஷன் டேனியல் ஜெஸ்லீன்
செல்வி.ஹாணி ஹார்ஸிதா வெங்கடேஷ்
செல்வி.லீனா வில்கின்ஸ்
செல்வி.ரோஸி சங்கர்

செல்வன்.ஏனோக் ஜோன் மார்க் அந்தோணி
செல்வன்.ஜோஸப் பிரின்ஸ் பால்ஜெகநாதன்
செல்வன்.டெலின் ஜெர்வின் பிராங்கின்
செல்வன்.கிதியோன் ஞானசேகர்
செல்வன்.ஸப்பரின் தீமோதி சிவகுமார்
செல்வன்.மோனித் ராஜ் வெங்கடேஷ்
செல்வன்.மெல்வீன் சாம் சாமுவேல் தாசையா
செல்வன்.கிளாட்வீன் சாமுவேல் எட்வீன்
செல்வன்.சைமன் ஜெயக்குமார்

சகோதரி.பெல்வியா ஜெரின்
சகோதரி.ஸ்நேகா எபநேசர்
சகோதரி.மேகலா ஆஸ்டீன்
சகோதரி.அஸ்வினி தினேஷ்
சகோதரி.ஏன்ஜலீனா மணிராஜ்
சகோதரி.பவானி ஆரோக்கியராஜ்
சகோதரி.ஜெபராணி தர்மர்

சகோதரி.தேவ சொருபி கமலதாசன்
சகோதரி.கலா விஜுநடராஜன்
சகோதரி.ரோஸ்லின் மேரி பால்ராஜ்
சகோதரி.சாந்தி ஜெயசேகர்
சகோதரி.ஹெப்ஸிபா பாமா சாம் ஆனந்த்

சகோ.ஆல்வின் ஜீலியஸ் தம்புகுமார்
சகோ.சத்தியநாதன்
சகோ.தாமஸ்
சகோ.சதீஸ் குமார் எத்திராஜ்
சகோ.தாஸ்
சகோ.ஸ்டாலின்
சகோ.எல்ஜின்
சகோ.சாந்தியா கட்டீஸ்
சகோ.வின்சென்ட் ஸ்வீட்
சகோ.அசோக் குமார்
சகோ.ஸ்டீபஃன் ஜெயகுமார்

**இனிய பிறந்தநாள் மற்றும் திருமணநாள் நல் வாழ்த்துக்கள்**

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

திருமதி ஸ்ரீ திரு. பாண்டியன், P
திருமதி ஸ்ரீ திரு. பக்தராஜ்
திருமதி ஸ்ரீ திரு.ஜோன்செல்வசிங்
திருமதி ஸ்ரீ திரு.அசோக்குமார்
திருமதி ஸ்ரீ திரு. முத்தையா
திருமதி ஸ்ரீ திரு.சதீஸ் குமார்
திருமதி ஸ்ரீ திரு.ஜெஸ்டீன்
திருமதி ஸ்ரீ திரு.வர்கீஸ்
திருமதி ஸ்ரீ திரு.ரிச்சர்ட்சன் டேனியல்

# 2019 ஜுலை மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை நேரம் மாலை 5:00 முதல்

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 07/07/2019 | சகோ.பிரசாத் | சகோ. ஆரோக்கியதாஸ் |
| 14/07/2019 | சகோ. சுகுமார் | சகோ. தாமஸ் |
| 21/07/2019 | சகோ. ஆராக்கியராஜ் | சகோ. பால் ஜெகநாதன் |
| 28/07/2019 | சகோ. ஜினு | சகோ. ஜெயசேகர் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 4:00 முதல் 5:45

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 5/07/2019 | சகோ.ஜெயபிரகாஷ் | சகோ. ஐசக்துரை |
| 12/07/2019 | சகோ. வேலு ராமர் | சகோ. கிறிஸ்டோபர் |
| 19/07/2019 | உபவாச திருவிருந்து ஆராதனை | |
| 26/07/2019 | சகோ. ஜோசப் | சகோ. ஆசீர்வாதம் |

**முழு இரவு ஜெபம்**
11/07/2019 (இடம் பரிசுத்த பவுல் ஆலயம் அஹமதி)
(நேரம் இரவு 10:00 மணி முதல் அதிகாலை 2:00 மணி வரை)

**சகோதரிகள் ஐக்கிய கூடுகை**
06/07/2019–அன்று நேரம் 6:30 to 8:30
(இடம் : சகோதரி. ஹெப்சிபா ஸ்டீஃபன் அவர்கள் இல்லத்தில் (அபுஹலிஃபா)
(வேத வினா பகுதி நியாயாதிபதிகள் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )

**26/07/2019 வாலிப ஐக்கிய கூடுகை**
நேரம் 6:30 to 8:30 (இடம் : ஜெப வீடு ஃபாஹீல் )
(வேத வினா பகுதி I சாமுவேல் புத்தகத்தில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் )

# வில்லியம் கௌடி
## (1857 - 1922)

சென்னை அருகிலுள்ள ஈக்காடு, திருவள்ளூர் பகுதியில் வாழ்ந்த தலித் மக்களை சமுதாய, ஆன்மீக அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க பெரும் சவால்கள் மத்தியில் அதிக முயற்சியெடுத்து உழைத்தவர் வில்லியம் கௌடி.

இங்கிலாந்து தேசத்தின் வட பகுதியிலுள்ள ஸ்காட்லாந்து மாநிலத்தில் சென்னர்விக் என்னும் ஊரில் 1857–ம் ஆண்டு மே மாதம் 6–ம் தேதி ஒரு தெய்வ பக்தியுள்ள குடும்பத்தில் பிறந்தார் வில்லியம் கௌடி. கௌடியின் பக்தியுள்ள தாய் தனது மூன்று ஆண் மக்களையும், ஒரு பெண் பிள்ளையையும் கிறிஸ்தவ மார்க்கத்தில் சிறப்புற வளர்த்தார். வேதாகமம் ஒன்றே இக்குடும்பத்திலுள்ள ஒரே புத்தகமாய் இருந்ததால் குடும்பத்தினர் அதனைப் பரிசுத்த நூலாக மதித்து படித்து வந்தனர். கர்த்தருடைய நாளைப் புனிதநாளாகக் கருதி ஆசரிக்க கௌடி பயற்றுவிக்கப்பட்டிருந்தார். தன் தாயாரின் அருகில் அமர்ந்து என் முதல் ஜெபத்தைக் கற்றுக்கொண்டதாக கூறுகிறார் கௌடி.

கி.பி. பதினெட்டாம் நூற்றாண்டில் ஜாண் வெஸ்லியின் மூலம் இங்கிலாந்து தேசத்தில் ஒரு உயிர் மீட்சி ஏற்பட்டு, மெதடிஸ்ட் இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. கௌடியின் பெற்றோர் மெதடிஸ்ட் இயக்கத்துடன் சேர்ந்து கிறிஸ்துவுக்காக சாட்சியுடன் வாழ்ந்தனர். கௌடியின் தந்தை உள்ளூர் பிரசங்கியானார். கௌடி எட்டு வயதாய் இருக்கும்போது, அவரது தாய் விஷக் காய்ச்சலினால் தாக்கப்பட்டு மரித்துப்போனார். அதிக வேதனையடைந்த கௌடியின் குடும்பம் நியூசிலாந்துக்கு மாறுதல் ஆகி லெர்விக்கு என்ற இடத்தில் வாழ ஆரம்பித்தனர்.

தனது பள்ளிப்படிப்பை முடித்த கௌடி 1874–ம் ஆண்டு "டிராக்ட் அண்டு புக் சொசைட்டி" என்ற நிறுவனத்தில் விநியோகஸ்தராகப் பணிபுரிய ஆரம்பித்தார். இக்காலத்தில் மூடி, சாஸ்கி ஆகிய புகழ்பெற்ற எழுப்புதல் பிரசங்கியார்களின் செய்திகளினால் வசீகரிக்கப்பட்டார். தானும் ஒரு ஊழியக்காரனாக வேண்டுமென்ற ஆவல் எற்பட்டது. ஒரு மாலைக் கூடுகையில் மெதடிஸ்ட் சிற்றாலயத்தில் தன்னை முற்றிலும் தேவப்பணிக்காக அர்ப்பணித்தார். 1878–ம் ஆண்டு ஊழியத்திற்கென்று தேர்வு செய்யப்பட்டு 1879–ம் ஆண்டு ரிச்மாண்ட் கல்லூரியில் வேதாகம மாணவராகப் படிக்க "சுர்ரே" என்ற இடத்திற்கு அனுப்பப்பட்டார்.

கடல் கடந்து வெளிநாட்டிற்கு மிஷனெரியாகச் செல்ல ஆர்வம் பெற்ற கௌடியை இந்தியாவுக்கு மிஷனெரியாகச் செல்லப் பணித்தபோது அதிக சந்தோஷத்துடன் அதனை தேவ சித்தமாக ஏற்றுக்கொண்டார். 1882–ம் ஆண்டு ஜனவரி 24–ம் நாள் லண்டனிலுள்ள ஒரு சிற்றாலயத்தில் குருவாக அபிஷேகம் பெற்றார். 1882–ம் ஆண்டு மார்ச் மாதம் சென்னை வந்த கௌடி முதலில் சென்னை ஜார்ஜ் டவுன், பரங்கிமலையிலுள்ள வெஸ்லி ஆங்கிலத் திருச்சபைகளில் ஊழியம் செய்தார். கூடவே பெரம்பூர், ரேணிகுண்டா, திருப்பதி ஆகிய நகரங்களில் வசித்த ரயில்வே பணியாளர் மத்தியிலும் ஊழியம் செய்தார். தமிழ் மொழியை விரைந்து கற்கத் தொடங்கினார்.

1883–ம் ஜனவரி மாதம் திருவள்ளூர் கிராமத்தினரிடையே ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டார். தம் ஊழியத்தின் தொடக்கத்திலேயே ஏழை மக்கள் மீது தம் பரிவினைக்

காட்டினார். தலீத் என்றழைக்கப்படுகிற மக்களிடையேயும் ஏழை இந்து மக்களையும் முழு மனதுடன் நேசித்து நற்செய்திச் சொன்னார். 1885-ம் ஆண்டு கௌடி கான்செட் என்ற இடத்தை சேர்ந்த செல்வி எலிசபெத் ரண்ட்லெட்ஜ் என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். இவர்களது முதல் மகள் மரித்து விட்டபடியால் மிகுந்த துக்கத்திலிருந்த கௌடி குடும்பத்துக்கு அடுத்து ஒரு மகனைத் தந்து தேவன் அசீர்வதித்தார். ஒடுக்கப்படுகிறவர்களுக்கு கௌடி உதவி செய்வதற்கு அவரது மனைவி எப்போதும் பெரிதும் துணைபுரிந்தார்.

திருவள்ளூர் அருகிலுள்ள ஈக்காடுப் பகுதிகளில் தனது மிஷனெரிப் பணியை தமிழ் மொழியிலேயே செய்ய ஆரம்பித்தார். தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் சுவிசேஷம் சொன்னபோது உயர்ஜாதி மக்கள் கற்களையும் நாற்றமடிக்கும் சேற்றையும் அவர்மீது அள்ளி வீசினர். கல்லெறியப்படும் பொழுது கௌடி சொன்னது நீங்கள் என்மீது கல்மழையைப் பொழிந்தீர்கள். கடவுள் உங்களுக்கு அரிசி மழையைத் தருவார் என்றார். இந்தக் கற்களால் கடவுள் தம் சபையை எழுப்புவார் என்ற விசுவாசத்துடன் உபத்திரவத்தைச் சந்தித்தார்.

கிறிஸ்துவுக்குள் அவர் பட்ட பிரயாசத்தின் பலனாக 1899-ம் ஆண்டு ஈக்காடு ஆலய அடிக்கல் நாட்டுவிழா நடத்தப்பட்டு, 1902-ம் ஆண்டு ஆலயம் பிரதிஷ்டையும் செய்யப்பட்டது. (சி.எஸ்.ஐ வெஸ்லி ஆலயம், ஈக்காடு). தாழ்த்தப்பட்ட தலித் ஏழை மக்கள், நிலச்சொந்தக்காரர்களுக்கு (மிராஸ்தாரர்களுக்கு) விவசாயக் கூலிகளாக இருந்தனர். வறுமையின் காரணமாக தாங்கள் வாங்கிய கடனுக்காக தம் வாழ்நாளெல்லாம் கொத்தடிமைகளாகப் பிணைப்பட்டுக் கிடந்தனர். கௌடி இதற்காக விசேஷக் கவனம் செலுத்தி அரசிடம் போராடி நிலங்களை அவர்களுக்காகப் பெறும்படிசெய்தார்.

ஈக்காடு கிராம மக்களுக்காக ஒரு மருத்துவ மனை அமைத்தார். 1897-ல் மகப்பேறு வார்டுகளும் கட்டப்பட்டன. கிராமப்புறங்களில் பெண்கள் அதிகமாக நேரத்தை வீணடிப்பதிலும், மூடப்பழக்க வழக்கங்களைப் பின்பற்றுவதிலும் கவனமாய் இருப்பதைப் பார்த்த கௌடி அவர்களுக்கு சுவிசேஷம் சொல்லப் பெண் ஊழியர்களை நியமித்தார். ஊழியங்கள் வளர வளர விசுவாசிகளுக்கு முறையான வேத அறிவு ஊட்டிட தலைவர்களைத் தேர்வுசெய்ய ஒரு பயிற்சி மையமும் கிண்டியில் அமைத்தார். கௌடி லண்டன் மெதடிஸ்ட் வட்டார மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு 1906-ம்ஆண்டு சென்னையை விட்டு இங்கிலாந்து சென்றார். எனினும் கௌடி தம்பதியினர் ஈக்காடு மிஷனை மறந்துவிடவில்லை.

ஈக்காடு திருப்பணியாளர்களுக்கு அடிக்கடி ஊக்கக் கடிதங்களை எழுதினார். 1914-ம் ஆண்டு பொதுச் செயலாளராகி மேற்கு ஆப்பிரிக்கா, மற்றும் உள்நாட்டு நிறுவன விவகாரங்களைக் கவனிக்கலானார். 15 ஆண்டுகளுக்குப் பின் இந்தியாவிற்கு வருகை தந்து 4 வாரங்கள் தங்கியிருந்து தான் ஊழியம் செய்த இடங்களை சந்தோஷத்துடன் பார்வையிட்டு அதன் வளர்ச்சியைக் கண்டு சந்தோஷமடைந்தார். முதல் உலகப்போர் தொடங்கியபோது கௌடியின் மூன்று ஆண்மக்களும் படையில் போர்வீரர்களாகத் தொண்டாற்றினர். கௌடியின் இரு ஆண்மக்களும் யுத்தத்தில் மரித்துப்போனார்கள். கௌடியின் உள்ளம் நொறுங்கியது. வேத வசனம் மட்டுமே கௌடி தம்பதியினரை ஆறுதல் படுத்தியது. 1922-ம் ஆண்டு ஏப்ரல் 9-ம் தேதி ஒரு குருத்தோலை ஞாயிறன்று கௌடி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

கர்த்தரின் பணியில்,

S.சுகுமார்

# 2019 ஜுலை மாதத்திற்கான வேத வினா!

1. உப்புத்தூணான ஒரு ஸ்திரி யார்?

2. இறைச்சியை தின்கிற பசுக்களை கண்டது யார்?

3. 4 சிங்கங்களும் 14 ஆடுகளும் ஒருமித்து ஒரு வருடம் தங்கியது எந்தக்காலம்?

4. பரிபூரணமுள்ள வருஷங்கள் எத்தனை?

5. நீ செய்கிற காரியங்கள் எல்லாவற்றிலும் தேவன் உன்னுடனே இருக்கிறார் என்றது யார்?

6. எந்த பட்டினத்தின் கூக்குரல் கர்த்தருடைய சமூகத்தில் பெரியதாய் இருந்தது ?

7. தங்கள் வஸ்திரங்களை கிழித்துக்கொண்ட தகப்பனும் மகனும் யார்?

8. தூதயீம் கனிகளை தன் தாய்க்கு கொண்டு வந்தவன் யார் ?

9. நிலத்தின் கனிகளை கர்த்தருக்கு காணிக்கையாக கொண்டு வந்தவன் யார் ?

10. குணசாலியும் கூடாரவாசியுமாயிருந்தவன் யார்?

11. தண்ணீர் இல்லாத வெறுங் குழியில் போடப்பட்டவன் யார்? பின்பு அவனை தூக்கிவிட்டவன் யார்?

12. நானூறு பேர் வருகிறதை கண்டு கலக்கமடைந்தவன் யார்?

13. தன் மனுக்கு ஒரு பெண்னை விவாகம் செய்து வைத்த தாய் யார்? மகன் யார்?

14. தன் தகப்னுக்காக ஏழநாள் துக்கம் கொண்டாடினவன் யார்?

15. எகிப்த்தியர்கள் யாருக்காக எழுபது நாள் துக்கங்கொண்டாடினார்கள்?

விடைகளை வருகின்ற 20-07-2019 க்குள் சபையின் செயலாளரிடமோ அல்லது செய்திமலர் பொருப்பாளரிடமோ நேரில் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.. அல்லது விடைகளை (Whatapps # 66015503 என்ற எண்ணிற்கு அனுப்பவும்) விடைகளை வேதாகமத்தில் ஆதியாகமம் 4,7,18,19,21,25,33,37,41,50,. ஆகிய அதிகாரங்களில் இருந்து பதிலைத் தேடுங்கள் )

(குறிப்பு) செயற்குழு உறுப்பினர் அல்லாது மற்றவர்களிடம் விடைத்தாள் கொடுக்கும்பட்சத்தில் ..அந்த விடைத்ததாளுக்கு செய்திமலர் பொறுப்பாளர் பொறுப்பல்ல,

**தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; - -**

**மத்தேயு 7:7**

## 2019 ஜுன் மாத வேத வினாவுக்கு பதில்

1. மோசே – அப்போஸ்தலர் 7: 20
2. கொர்நேலியு – அப்போஸ்தலர் 10: 1,2
3. 120 சீஷர்கள் – அப்போஸ்தலர் 1: 12–15
4. அப்போஸ்தலர் 20 :29
5. அப்பொல்லோ – அப்போஸ்தலர் 18: 24
6. மூப்பர்களை – அப்போஸ்தலர் 14: 23
7. ஸ்தேவான் – அப்போஸ்தலர் 6: 15
8. பிலிப்பு – அப்போஸ்தலர் 8: 40
9. பவுல் – பர்னபா – அப்போஸ்தலர் 15: 35
10. தீமோத்தேயு – அப்போஸ்தலர் 16 : 1
11. லீதியாள் – அப்போஸ்தலர் 16: 14
12. அனனியா – அப்போஸ்தலர் 23 : 2
13. கிறிஸ்பு – அப்போஸ்தலர் 18 : 8
14. சொஸ்தனே – அப்போஸ்தலர் 18 : 17
15. சவுல் (பவுல்) – அப்போஸ்தலர் 22: 19–20

**யாத்திராகமம் பற்றிய முக்கிய குறிப்பு புள்ளி விவரங்கள்**

அதிகாரங்கள் 40
வசனங்கள் – 1213

பெரிய அதிகாரம் – 12
வசனங்கள் 51

சிறிய அதிகாரம் –11
வசனம் 10

அழைப்புகளும் அற்புதங்களும் நிறைந்த புத்தகம்

**முக்கிய கதாபாத்திரங்கள்**
மோசே, ஆரோன், மிரியாம், பார்வோன், யோசுவா, பெசலயேல், அகோலியாப்.

**முக்கியமான இடங்கள்**
எகிப்து,கோசேன், செங்கடல்,சீனாய்மலை,
சீன வனாந்திரம் , மாரா,ஏலிம்,ரெவிதீம்.

**பத்து வாதைகள்**
அதிகாரங்கள் 7,8,9,10,11.
1 நதியின் தண்ணீர் இரத்தமாக மாறுதல்
2 தவளைகள் 3. பேன்கள்
4. வண்டுகள், 5.மிருகஜீவன் கொள்ளை நோய்.
6. கொப்புளங்கள் 7. கல்மழை
8. வெட்டுக்கிளி 9. காரிருள்
10. தலைபிள்ளை மிருக ஜீவன்கள் தலையீற்று சங்காரம்

## 2019 ஜுன் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis. பத்மினி வர்கீஸ்
Sis. லதா கிறிஸ்டோபர்
Sis. ஜீவி பாக்கியவதி வேதானந்தம்
Sis. செலின் டேவிட் ஜெயகுமார்
Sis. பிரிசில்லா செங்குட்டுவன்
Sis. அனிதா திவ்யராஜ்
Sis. ஹெலன் சாஜிதா ராபின்
Sis. ஷீபா ஜிவல் சிங்
Sis. சாந்தி
Sis. தயா இயேசு ரெத்தினம்

கர்த்தரே ஆவியானவர்; கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. ( 2 கொரி 3:17)

## "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள் அதனிடத்தின்று ஜீவ ஊற்று புறப்படும்"

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் உங்கள் யாவருக்கும் என் அன்பின் வாழ்த்துக்கள். இந்த இதழ் வழியாக உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த இளமையான வாலிப பிரயாயத்திலே ஆண்டவரோடு அதிக உறவு வைத்துக்கொள்ள முடியாமல் இச்சைகளும், உலகத் தேவைகள், மனச்சோர்வுகளோடு ஆண்டவரோடு தூரமாய் இருக்கிறேன் என்று எண்ணுகிறீர்களா? அநேக வாலிபர்கள் இன்றைக்கு என்னாலே அதிகமாக ஜெபிக்க முடியவில்லை. இரண்டு நாள் தொடர்ந்து நன்றாக ஜெபிக்கிறேன் மூன்றாம் நாள் ஒரு வகையான சோர்வு என்னை ஆட்கொள்ளுகிறது, சிந்தனைகள் சிதறுகிறது என அநேக வாலிபர்கள் சொல்லுகிறார்கள். அப்படியென்றால் பிசாசானவன் உங்களை ஆளுகை செய்துகொண்டிருக்கிறான் என்று விளங்கிக்கொள்ளுங்கள். ஏனென்றால் வேதம் சொல்கிறது "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள் ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடி சுற்றித் திரிகிறான்" என்று 1–பேது–5:8–ல் வேதம் சொல்கிறது.

உதாரணமாக வேதாகமத்தில் என் தாசன் அவனைப் போல் நீதிமான் ஒருவனும் இல்லையென்று தேவனே சாட்சி கொடுத்த யோபுவை பிசாசானவன் கவிழ்க்கும்படியாக வகை தேடினான். ஆனால் யோபுவோ தான் எல்லாவற்றையும் இழந்தும் கூட தேவனை பற்றி எந்தக் குறையும் கூறவில்லை. அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாயிருப்பேன். யோபு–18: என்று அவர் ஒரு நம்பிக்கைக்கு ஆதாரமாக விளங்குகிறார்.

கிறிஸ்துவுக்குள் வளர வளர பாடுகள் வரும் அதைத்தான் வேதம் சொல்கிறது ஒருவன் கிறிஸ்தவனாயிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாமலிருந்து அதனிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார்.

ஆதியாகம் புஸ்தகத்திலே யோசேப்பை குறித்து பார்த்தோம் என்று சொன்னால் ஆண்டவர் அவனுக்க கொடுத்த தரிசனங்கள் வேறு ஆனால் நடந்தது வேறு எல்லாருடைய கதிரிலும் இவனுடைய கதிர் ஓங்கி வளரும் சகோதரர் தகப்பன் என அனைவரும் இவர் முன்பாக பணிந்து வணங்குவார்கள் என சொப்பனம் கண்டான். ஆனால் அவனுக்கு காத்திருந்தது படுகுழி. படுகுழி அவனுக்கு தோண்டபட்டதின் நிமித்தமாகத்தான் அவன் எகிப்திலே அரசனாக மாறினான். இன்றைக்கும் தேவைகளோடு பாரத்தோடு காணப்படுகிறீர்களா? வேலை, விசா, சம்பளம் இல்லை போன்ற கவலைகள் நிமித்தம் கலங்கி காணப்படுகிறீர்களா? கவலைப்படாதிருங்கள்.

ஏற்ற காலத்தில் தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள் (1-பேது-5:6)

சொன்னது போல மனுஷன் உங்களுக்கு விரோதமாக என்ன செய்தாலும் அவர்களோட இருக்கிறவர்களை காட்டிலும் நம்மோடிருக்கிறவர் பெரியவர் என்ற நம்பிக்கையிலே இருங்கள். யோசேப்பை போல பொறுமையாய் காத்திருங்கள்.

ஒரு மரவேலை செய்யும் தச்சர் தனது உளி மற்றும் சுத்தியல் வைத்து வேலை செய்து கொண்டிருக்கும்போது உளியால் தனது பெரு விரலை காயப்படுத்தி விட்டாராம். அப்பொழுது இரத்தம் சொட்டுகிற சூழ்நிலையிலும் அப்பா ஸ்தோத்திரம் உமக்கு நன்றி என்று சொன்னாராம். இதைப் பார்த்த அவருடைய முதலாளி என்னடா பைத்தியக்காரனா நீ? இரத்தம் சொட்டுகிறது நன்றி என்று சொல்லுகிறாயே என்று கேட்டாராம். அதற்கு தச்சர் நான் அடிப்பட்ட ஒரு விரலுக்காக நன்றி சொல்ல வில்லை, காப்பாற்ற பட்ட நான்கு விரலுக்காக நன்றி சொன்னேன் என்றான். இதுதான் கிறிஸ்தவ பெலன் மற்றும் நம்பிக்கை.

ஆகவே அன்பான சகோதரனே, நீ ஆண்டவருக்காக எழும்ப நினைக்கும் போது அநேக போராட்டங்கள் வரும் எதையும் பார்த்து சோர்ந்து போகாமல் உன் ஜீவன் உயிரோடு இருக்கிறதற்காக நன்றி சொல்லி ஆண்டவருக்காக எழும்பி பிரகாசி.

நான் பரிசுத்தமாய் வாழனும் அவரோடு பேச வேண்டும் என்று ஆசைப்படுகிறாயா? இன்றே உன்னை முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடு, அப்பா என்னை மாற்றுங்க, நான் உங்கள் கரத்தை பிடித்தால் விட்டு விடுவேன், நீர் என் கையை பிடிக்க வேண்டும் என்று கேளுங்கள். இந்த உலகம் கொடுக்கிற மாயையான சந்தோஷத்தை பார்க்கிலும் ஆண்டவர் கொடுக்கிற சந்தோஷத்திற்கும், ஆசீர்வாதத்திற்கும் அனேக வித்தியாசங்கள் உண்டு. அதுவே நிலைத்திருக்கும்.

"உன் செய்கைகளை கர்த்தருக்கு ஒப்புவி அப்பொழுது உன் யோசனைகள் உறுதிப்படும்" (நீதி-16:3),

"கர்த்தரின் ஆசீர்வாதமே "ஐசுவரியத்தை தரும் அதனோடேயே அவர் வேதனையை கூட்டார்" (நீதி-10:22)

பேர் கிறிஸ்தவனாய் வாழ்வதை விட கிறிஸ்துவின் சிந்தையுடையவனாய் வாழ முயற்சி செய்ய வேண்டும்.

தேவன் தாமே நம் அனைவரோடும் கூட இருப்பாராக.

**திருச்சபையின் வாலிபர் குழு**

# கனத்தை விரும்பாதே

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரியே சகோதரனே! சாதாரணமாக பாவம் செய்கிறார்கள் தாங்கள் செய்த பாவங்களை குறித்து உணரும் போது தேவனிடத்தில் மன்னிப்பு கேட்கிறார்கள். ஆனால் இஸ்ரவேலின் முதல் ராஜாவாகிய சவுல் சொல்வதை பாருங்கள், அவனுடைய பாவம் சுட்டிகாட்டியபோது அவன் சொல்லுகிறான் நான் பாவம் செய்தேன் இப்பொழுது நீர் என்னை கனம் பண்ணும் என்கிறான். சவுல் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்ததை அறிந்த போதிலும் , அவன் மன்னிப்பை தேடுவதற்கு பதிலாக கனத்தை தேடுகிறான், இது மிகவும் துக்ககரமான விஷயம் ஆகும். ஒருவன் தான் பாவம் செய்ததை அறிந்தபோதும் அதற்கு மன்னிப்பை தேடாமல் கனத்தை தேடுவானானால், அவனுடைய வாழ்க்கை பரிசுத்தமில்லாதது என்பதை நாம் விளங்கி கொள்ள வேண்டும்.

சவுல் வில்வீரரால் மிகவும் காயப்பட்ட போது அவன் தான் மரிக்க போவதை அறிந்தான். அந்த கடைசி நிமிடங்களிலாவது தான் செய்த பாவத்திற்கு மனஸ்தாபபட்டு மனம் திரும்புவதற்கு பதிலாக அந்த இடத்திலும் கனத்தையும். கவுரவத்தையும்தான் நாடுகிறான். சவுல் தன் ஆயுததாரியை நோக்கி அந்த விருத்தசேதனம் இல்லாதவர்கள் வந்து என்னை குத்திபோட்டு,என்னை அவமானப் படுத்தாதபடிக்கு, நீ உன் பட்டயத்தை உருவி, என்னை குத்தி போடு என்றான். அவனுடைய எண்ணமெல்லாம், தன் மரணத்திற்கு பின்னர் தான் விருத்தசேதனம் இல்லாத ஒரு நபரால் கொல்லப்பட்டதாக ஒருவரும் தன்னை குறித்து சொல்லக்கூடாது என்பதில்தான் அவன் குறியாக இருந்தான். இதுதான் உண்மை, அவனை யார் கொலை செய்தாலும் மரணத்திற்கு பின் அவன் போக போகிற இடம் நரகமே” அவனுடைய ஆயுததாரி அவனை கொல்ல மறுத்த போது சவுல் தன் பட்டயத்தை நட்டு அதின் மேல் விழுகிறான் . அவனுடைய தற்கொலை முயற்சியும் தோல்வியில் முடிந்தது. மரணமும் தன்னை பகைக்கிறது என்பதை அறிந்து கொண்டவுடன் ஒரு அமலேக்கியனிடம் சொல்லுகிறான். நீ என்னை கொன்று போடு என்கிறான். அமலேக்கியன் அவன் மேல் ஏறி நின்று அவனுடைய தலையை வெட்டி போடுகிறான்.

இதிலே நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் கனத்தை விரும்பிய சவுலுடைய எண்ணம் முழுவதும் விருத்தசேதனம் பண்ணபடாத ஒரு பெலிஸ்தியன் தன்னை கொல்லுவதை விரும்பவில்லை. ஆனால் ஒரு அமலேக்கியனிடம் தன்னை கொல்லும்படி சொல்லுகிறான். இதுதான் அவன் செய்த செயல்களில் கீழ்தரமான காரியம், தேவனுடைய பார்வையில் பெலிஸ்தியஸ்தரை காட்டிலும் அமலேக்கியர்கள்தான் மோசமானவர்கள், அருவருப்பானவர்கள், சவுலின் முடிவு நம் ஒவ்வொருவருக்கும் ஒரு எச்சரிக்கையாக இருக்கிறது. கனத்தை விரும்பாதே! இந்த உலகத்தின் கனம் ஒரு நிழலை போல மறைந்து போக கூடியது. நாம் எவ்வளவு அதிகமாக அதை நாடி போகிறோமோ அவ்வளவு அதிகமாக அது நம்மை விட்டு ஓடி போகும்.

நாம் எப்படி என்பதை நினைத்து பார்ப்போம்! சவுலை போல நாம் பாவத்திற்கு தேவனிடம் மன்னிப்பு கோருவதற்கு பதிலாக கனத்தை எதிர்பார்கிறோமா? அல்லது ஆயக்காரனை போல நம்மை தாழ்த்தி தேவனிடத்தில் மன்னிப்பை கோருகிறோமா? சிந்திப்போம் ! செயல்படுவோம் !

**தேவன் நம்மை ஆசீர்வதிப்பாராக**

# கடந்த மாத நிகழ்வுகளில் சில உங்கள் பார்வைக்கு














செயற்குழு உறுப்பினர்கள்

சபை ஊழியர் – சகோ. ஸ்டாலின்

66021072

செயலாளர் – சகோ. ஆரோக்கியதாஸ்

99870126

பொருளாளர்– சகோ. எபநேசர்

23922058 - 50203472

பெண்கள் ஐக்கிய தலைவி

சகோதரி . பியூலா ஜெகநாதன்

60797360

வாலிப ஐக்கிய தலைவர் –

சகோ. ஆரோக்கியராஜ்

66159784

Church Website Address - ahmaditamilcongregation.org

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களுக்கு வாகன வசதி தேவைபடும்

பட்சத்தில் நீங்கள்

சகோதரர் ஜான்ஸன் அவர்களை தொடர்பு கொள்ளும்படி

கேட்டுக் கொள்ள படுகிறோம்

அவரது தொலை பேசி எண்

97610275

Private Circulation only